**DEPOSITION OF WITNESS**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**
- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC **.No. 141/2019**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW6
Defendant :
Court :

Name : சிவக்குமார் – காவல் கூடுதல் கண்காணிப்பாளர்(ஓய்வு)
Father's Name : பத்மநாபன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

17.07.2026**CC.No.141/2019** அ.சா.6 சிவக்குமார் –காவல் கூடுதல் கண்காணிப்பாளர்(ஓய்வு)

(எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**முதல் விசாரணை:**

1) நான் தற்போது மதுரையில் வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறேன். இதற்கு முன்பு அரியலூர் மாவட்டம் காவல் கூடுதல் கண்காணிப்பாளராக இருந்து கடந்த 01.12.2024 ம் தேதி விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் 1407 திரு. சாக்ரட்டிஸ் என்பவர் காலமாகிவிட்டதால் அவருக்கும் சேர்த்து நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 02.05.2008ம் தேதி 21.00 மணிக்கு நாகராஜன் மகன் நேரு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.157/2008 பிரிவு 304(A) இதசவின் கீழ் தலைமைக் காவலர் 1407 திரு. சாக்ரட்டிஸ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) அதன் பின்பு இவ்வழக்கினை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 03.05.2008ம் தேதி திருப்புவனம் காவல் ஆய்வாளராக

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.17 12:55:15 +0530

பணியில் இருந்தபோது காலை 07.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ராமலிங்கம் மற்றும் மருதுபாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

4) பின்னர் பட்டியல் சாட்சிகள் நேரு, சுப்பையா, இதயதுல்லா, அம்பலநாதன் மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை தனிதனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். அதன் பின்பு அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து காலை 11.00 – 13.00 மணி வரை இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன ராமன் என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கையை தயார் செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5) அதன் பின்பு ராமன் என்பவரின் இறப்பிற்கான உண்மை காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்தை தலைமைக்காவலர் 1407 திரு. சாக்ரட்டீஸ் என்பவர் மூலம் கொடுத்து அனுப்பினேன். சாட்சிகளின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரி அய்யனார் என்பவரை திருப்புவனம் காவல் நிலையத்தில் வைத்து 04.05.2008ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன்.

6) பின்னர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 57 B 4786 என்ற பதிவெண்கொண்ட டாடா 407 வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி சிவகங்கை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. கல்யாணக்குமார், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றேன். **(மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.7 ஆக எதிரி தரப்பு சம்மதத்துடன் குறியீடு செய்யப்படுகிறது)** மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் விபத்து வாகனத்தின் இயந்திரக்கோளாறினால் ஏற்படவில்லை என சான்றுவழங்கியுள்ளார்.

7) விபத்தில் இறந்துபோன ராமன் பிரேதத்தை பரிசோதனை செய்த மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் மெய்யழகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். **(பிரேத பரிசோதனை சான்று அ.த.சா.ஆ.8 ஆக எதிரி தரப்பு சம்மதத்துடன் குறியீடு செய்யப்படுகிறது)** பிரேத பரிசோதனை சான்றிதழில் காயம்பட்டவர் அவருக்கு ஏற்பட்ட THE DECEASED WOULD APPEAR TO HAVE DIED OF CRANIO CEREBRAL INJURIES காரணமாக இறந்துள்ளார் என சான்று வழங்கியுள்ளார். பின்னர்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.17 12:55:23 +0530

இவ்வழக்கில் பிரேதத்தை மருத்துவருக்கு அங்க மச்ச அடையாளம் காட்டி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக்காவலர் 1407 திரு. சாக்ரட்டீஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது 304 (A) இதசவின் கீழ் 04.06.2008–ம் தேதியன்று கணம் நீதித்துறை நடுவர், மானாமதுரை முன்பாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1) சம்பவமானது 02.05.2008ம் தேதியன்று மதியம் 01.00 மணியளவில் நடைபெற்றுள்ளது என்றால் சரிதான். மேற்படி விபத்து சம்பந்தமான தகவல் காவல் நிலையத்திற்கு 02.05.2008ம் தேதி இரவு 09.00 மணிக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். மேற்படி தகவல் காவல் நிலையத்திற்கு 9 மணி நேரம் காலதாமதமாக கிடைக்கப்பெற்றதற்கு புகார்தாரர் தனது புகாரில் காரணம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்விபத்தானது மதுரை – இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்றுள்ளது என்றால் சரிதான். மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு எங்களது காவல் நிலையத்தை கடந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

2) எங்கள் காவல் நிலையத்தை கடந்து மருத்துவமனைக்கு செல்லும்போது புகார்தாரர் அ.த.சா.ஆ.1 புகாரை கொடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு புகாரானது காவல் நிலையத்தில் பெறப்பட்டதா அல்லது மருத்துவமனையில் பெறப்பட்டதா என்றால் காவல் நிலையத்தில் பெறப்பட்டது. விபத்தானது ரோட்டின் எந்த பகுதியில் நடைபெற்றது என அ.சா.1 தனது புகாரிலோ அல்லது முதல் தகவல் அறிக்கையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பெற்ற வாக்குமூலங்கள் மற்றும் குற்ற இறுதி அறிக்கையில் இந்த விபத்தானது ரோட்டின் எந்த பகுதியில் நடைபெற்றது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) இந்த விபத்தானது ஆஜர் எதிரி வாகனத்தை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இயக்கிவரும் போது இறந்துபோன நபர் சைக்கிளிலில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லும்போது தான் நடைபெற்றது என்றால் சரிதான். நான் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் விபத்தானது ரோட்டின் நடுப்பகுதியில் நடந்ததாகத் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் லாடனேந்தல் பேருந்து நிறுத்ததிற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 20 அடி துாரம் இருக்கும். பேருந்து நிறுத்ததில் உள்ள நிழற்குடையில் முன்பகுதி மட்டும் தான் திறந்தவெளியாக இருக்கும் என்றால் சரியல்ல இரண்டு பக்கமும் பார்க்கலாம்.

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.17 12:55:35 +0530

நான் சொல்வது போல் மேற்படி பேருந்து நிறுத்ததின் நிழற்குடையிலிருந்து இரண்டுபுறமும் பார்க்க முடியாது என்றாலும் முன்பகுதி மட்டும் தான் திறந்திருக்கும் என்றாலும் சரியல்ல.

4) மோட்டார் வாகன ஆய்வாளர் தனது ஆய்வு அறிக்கையில் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் இடது பக்க பின்பக்க வீல் மக்காடில் சேதமடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாகனங்கள் எதிர் எதிராக வந்து மோதும்போது விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தில் மேற்படி சேதம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் விபத்து எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இறந்துபோன ராமன் என்பவர் தான் ஆஜர் எதிரி ஓட்டி வந்த வண்டிக்குள் வந்து தானாக விழுந்ததன் விளைவாக இவ்விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. இந்த எதிரியின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என்றாலும் இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன ராமன் என்பவரின் கவனக்குறைவால் விபத்து நடைபெற்றது என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த விபத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.17 12:55:48 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.